பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். 27.08.2021

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு ஆகஸ்ட் மாதம் 30 ம் நாள் (31.08.2021) காலை 11.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்</u>**

| | |
|---|---|
| பொருள்–1 | பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான பாம்பு விழுந்தான் கிராமத்தில் உள்ள உரக்கிடங்கில் பல ஆண்டுகளாக 1 முதல் 36 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகள் உரக்கிடங்கில் கொட்டப்பட்டு மொத்தமாக சுமார் 85858 க.மீ குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளது. இதில் இயற்கையின் சீற்றத்தினால் அடிக்கடி புகை மண்டலமாக காட்சியளிக்கிறது. இதனால் சுற்றுப்புறச்சூழல் மாசு மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி அரசு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 7வது உயர்மட்டக்குழு (State High power Committee)–ன் பரிந்துரையில் இந்நகராட்சியில் உள்ள குப்பைகளை முழுவதுமாக அகற்றி மக்களின் நலன் காக்கும் வகையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு எண் 22866/பி3/2018 நாள் 23.08.2018ல் ரூபாய் 565.00 லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>அதனை தொடர்ந்து தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரக சென்னை அவர்களது செயல்முறை ந.க.எண். 18281 /2016/DO3/ நாள். 29.08.2018 –ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி 24.01.2019 அன்று பெறப்பட்டது. மதிப்பீட்டை விட 4.93 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S Susi Industries சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி பொதுமக்கள் நலன் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.477 நாள். 30.01.2019 –ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது .<br>அதனடிப்படையில் மேற்கண்ட உரக்கிடங்கில் உள்ள 85858 திடக்கழிவுகளை நாள் ஒன்றுக்கு 235 வீதம் 365 நாட்களில் தனித்தனியாக பிரித்து உரக்கிடங்கிலிருந்து உரம், மண் மற்றும் தேவையற்ற அனைத்து பொருட்களும் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் 04.02.2019 அன்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.<br>வேலை உத்தரவு வழங்கிய பிறகு CES அண்ணா பல்கலைகழகம் மூலம் 18.03.2019 அன்று 6933 கன மீட்டருக்கும் (2குவியல்) அதனைத்தொடர்ந்து 17.08.2020 அன்று 7873 கன மீட்டருக்கும் (1குவியல்) அளவீடு செய்து கொடுக்கப்பட்டது அளவீடு செய்யப்பட்ட 14806 கன மீட்டர் திடக் கழிவுகளில் M/S Susi Industries சென்னை நிறுவனம் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டு அண்ணா பல்கலைக்கழகம் சென்னை பரிந்துரையின் பேரில் 14256 கன மீட்டர் திடக்கழிவுகளை அப்புறப்படுத்திய வகையில் பட்டியல் தொகை ரூ.9558648 /– இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இப்பணியை துரிதமாக மேற்கொள்ளவே இந்நிறுவனத்திற்கு 16.10.2019 ,12.11.2019,12.12.201. மற்றும் 31.01.2020 ஆகிய தேதிகளில் அறிவிப்பு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. பின்னர் 30.11.2020 அன்று அண்ணா பல்கலைக்கழகம் மூலம் 4871 கனமீட்டருக்கு (1குவியல்) அளவீடு செய்து கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்படாத சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் (29.12.2020) மேற்படி பணியை விரைவாக செயல்படுத்த அறிவுறுத்தியதை தொடர்ந்து அலைபேசி மூலமாக பல முறை தொடர்பு கொண்டும் 23.02.2021 மற்றும் 24.03.2021 ஆகிய தேதிகளில் வேலையை துரிதப்படுத்த அறிவிப்பு கடிதம் வழங்கிய பிறகும் மேற்படி நிறுனத்தினர் எழுத்துபூர்வமாக பருவமழை மற்றும் கொரோனா–19 போன்ற காரணங்களை காட்டி 31.03.2021 வரை காலஅவகாசம் கோரினார்கள் இருந்தும் பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அலுவலக குறிப்பாணையும் வழங்கப்பட்டது.<br>மீண்டும் இரண்டாவது முறையாக இறுதி வாய்ப்பாக திட்ட செயலாக்க அறிக்கை (30.07.2021 ) அன்று சமர்ப்பித்து இரண்டு சலிக்கும் இயந்திரம் மூலம் ஒரு நாளைக்கு 500கமீ குப்பைகளை தரம் பிரிப்பதாக மேற்படி நிறுவனம் மூலம் உறுதி அளித்ததின் பெயரில் கால |

| | |
|---|---|
| | அவகாசம் 11.01.2022 வரை வழங்கப்பட்டது. ஆனால் இது நாள் வரையிலும் பல முறை அறிவிப்புகள் வழங்கியும் முடிக்கப்படும் என வார்த்தைகளால் மட்டுமே பதிலாக கிடைக்க பெற்றது. ஆனால் பணி இன்று வரை தொடர்ந்து நடைபெறவில்லை. வேலையை துரிதப்படுத்த மற்றொரு கூடுதல் இயந்திரம் பொருத்தப்பட்டு பகல், இரவு வேலையாக நடைபெறும் என நிறுவனத்தினால் உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் செயல்பாடுகளில் எந்த வித முன்னேற்றம் இல்லை. மேலும் அப்பணி எந்த நோக்கத்திற்காக எடுக்கப்பட்டதோ அது நிறைவேறவில்லை. நிறுவனத்தினர் முறையாக வேலை செய்து பணியினை முடிப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. எனவே அரசுக்கும், இந்நகராட்சிக்கும் அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கில் இந்நிறுவனம் செயல்படுவதாக தோன்றுகிறது.<br>மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 31.07.2021—ம் தேதிய காணொளி ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி நிறுவனத்தின் மெத்தனப்போக்கை கண்டித்து மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவினை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவினை ஒப்பந்த விதி பிரிவு I.T.T. 36.2 (Instruction to Tender 36.02 ) படி ரத்துசெய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அண்ணா பல்கலைகழகம் மூலம் மூன்றாவதாக அளவீடு செய்யப்பட்ட **4871** கனமீட்டரில் நாளது தேதி **(30.08.2021)** வரை மேற்படி நிறுவனத்தினால் **4586** கனமீட்டர் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி மேற்கொண்ட வகையில் மேற்படி நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய தொகை ரூ.**3074913/—** ஆகும்.<br>எனவே மொத்தம் உள்ள **85858** கனமீட்டர் திடக்கழிவுகளில் மேற்படி நிறுவனத்தினால் பணி மேற்கொள்ளப்பட்ட **18842** கனமீட்டர் திடக்கழிவுகள் அகற்றியது போக **(**தொகை ரூ.**12633561/—)** மீதமுள்ள **67016** கனமீட்டர் திடக்கழிவுகள் அப்புறப்படுத்துவதற்கு நடப்பாண்டு விலை விகிதத்தின்படி திருத்திய மதிப்பீடு ரூ.**525.00** லட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்து மேல் நடவடிக்கை தொடர மன்றதின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>1.மேற்காணும் M/S Susi Industries சென்னை நிறுவனத்தின் உத்தரவை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அரசு மானியம் போக கூடுதல் தொகை ரூ.86.34 இலட்சத்தினை பொதுநிதி அல்லது அரசின் மூலதன மானிய நிதி (Capital Grand Fund) அல்லது உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி (Infra Cap Filling Fund ) லிருந்து முழுமானியமாக பெற்று பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1449, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்—2 | இந்நகராட்சியில் ஊதிய நிர்ணயம் செய்து நிலுவைத்தொகை வழங்கியது தணிக்கை தடை எழுப்பப்பட்டது மிகுதியாக வழங்கப்பட்ட தொகையினை பிடித்தம் செய்ததற்கு எதிராக 6 நபர்களால் தொடங்கப்பட்ட வழக்கில் நகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட வழக்கினை மேல்முறையீடு செய்ததில் மேல்முறையீட்டு வழக்கு எண்.(WA)Nos.645 of 2021CMP (MD) No.2841,2844,2846,2848,2849,2850 of 2021 ன்படி மேல்முறையீடு செய்யப்பட்டு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு மிகுதியாக வழங்கப்பட்ட ஊதியத்தினை பிடித்தம் செய்வதிலிருந்து நிறுத்தி வைத்த உத்தரவை பிடித்தம் செய்யலாம் என்று தெரிவித்து உயர் நீதிமன்ற மதுரை கிளையில் டிவிசன் பெஞ்சில் 01.07.2021 ம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மேல்முறையிட்டு வழக்கிற்கான கட்டணத்தொகை 6 நபர்களுக்கு தலா ஒரு வழக்கு வீதம் தொகை ரூ.15000 X 6 = 90000 வழங்க திரு.எம்.கண்ணன் வழக்கறிஞர் மூலம் பில் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை திரு.எம்.கண்ணன் |

| | |
|---|---|
| | வழக்கறிஞர் அவர்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –**<br>**1.**மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1450, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–3 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2021ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1451, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–4 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2021ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1452, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–5 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2021ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1453, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–6 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2021ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1454, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–7 | பரமக்குடி நகராட்சி பாரதி நகர் பகுதி வார்டு–ஜி, பிளாக்–24, நகரபுல எண்.39/1ஏ1ஏ1–19, பழைய சர்வே எண்.92/1, மனைப்பிரிவு எண்.94/81–ன்படி, பட்டாதாரரால் மனைப்பிரிவு செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்.401, நாள்.31.03.82–ன்படி, பொது ஒதுக்கீடு இடங்கள் நகராட்சி ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும் என உறுதிமொழி பத்திரத்தின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் மனைப்பிரிவு பூங்கா பகுதியினை நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு உரிய அடிப்படை வசதி செய்து கொடுக்க கூறி தனிநபரால் தொடரப்பட்ட வழக்கு எண்.டபிள்யூ.பி.(எம்.டி) எண்.10398/13, தீர்ப்பு நாள்.01.07.2013ம் தேதி நீதிமன்ற உத்தரவில் பொது ஒதுக்கீடு நிலம் நகராட்சிக்கு சொந்தமானது என கூறியுள்ளதால், நகராட்சி சார்பாக விளம்பர போர்டு நிறுவப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேற்படி பொது ஒதுக்கீடு இடம் நகரளவை ஆவணங்களில் தனிநபருக்கு கொடுக்கப்பட்ட பட்டாவினை ரத்து செய்து ஆணையாளர் பெயருக்கு மாற்றம் செய்து வழங்கக் கோரி வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.<br>தற்போது வார்டு எண்.24, 25 ஆகிய பகுதிகளில் வாழும் பொதுமக்கள் சார்பாகவும் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி பொது ஒதுக்கீடு பகுதியில் ஒரு ஓரமாக புதிய மின்மாற்றி அமைக்க அனுமதி கேட்கப்பட்டுள்ளது. ஆகையால் பொது ஒதுக்கீடு இடத்தின் ஓரமாக மின்மாற்றி அமைக்க |

| | |
|---|---|
| | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>பொதுமக்களின் நலன் கருதி மேற்படி இடத்தில் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம் எண்.1455, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–8 | பரமக்குடி நகரம் எமனேஸ்வரம் கிராமம் வார்டு –சி, பிளாக்–1, நகரபுல எண்.4/1,2,3ஏ மற்றும் 4ஏ ல் 1.73 ஏக்கர் (7020 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.13.10.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொ) இராமநாதபுரம் அவர்களால் ந.க.எண்.270/2021/இராமா நாள்.30.07.2021–இன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா இடங்கள் தானபத்திர எண்.2786/2021 நாள்.06.07.2021–ன்படி அரசுக்கு பதிவு செய்து அதன் உண்மை நகலினை (ஜெராக்ஸ் காப்பி) நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளார். அனுமதியற்ற மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1456, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–9 | இந்நகராட்சி பொதுப்பிரிவில் உள்ள கணினி அறையில் உள்ள இணையதள சேவைகளை பயன்படுத்தி வரும் BSNL மோடம் மற்றும் பொதுசுகாதாரப்பிரிவில் பிறப்பு/இறப்பு சான்றுகளை பொதுமக்களுக்கு வழங்க பயன்படுத்தப்படும் இணையதள சேவை BSNL மோடம் ஆகிய இரண்டு மோடங்கள் 23.08.2021 அன்று இந்நகரில் இடியுடன் கூடிய மழை பெய்த காரணத்தினால், பலத்த இடிமின்னலால் பழுதடைந்து விட்டது.<br>அலுவலக நிர்வாக நலன் கருதியும், பொதுமக்களின் தினசரி சேவைகளுக்காகவும் மேற்கண்ட மோடங்கள் புதியதாக வாங்கி பொருத்தி பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.<br>எனவே, மேற்கண்ட இரண்டு BSNL மோடங்களை அவசர அவசியம் கருதி புதியதாக வாங்கி பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.5000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு–**<br>கணினி வரிவசூல் மற்றும் பிறப்பு/இறப்பு சான்றுகள் பதிவு செய்து உடனடியாக வழங்க வேண்டிய அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1457, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–10 | பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் முடித்திருத்தகம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் ஆகியவற்றிற்கு தொழில் உரிமக் கட்டணம் (D&O) நிர்ணயம் செய்துள்ள அறிவிப்பினை இராமநாதபுரம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய, பக்கம் ஒன்றிற்கு ரூ.2100/– வீதம் இரண்டு பக்கங்களுக்கும், அரசிதழ் தலைப்பு ஒரு பக்கமும் மொத்தம் மூன்று பக்கங்களுக்கு ரூ.6300/–ஐ, பரமக்குடி சார்நிலைக் கருவூலத்தில் செலுத்தி, மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய வேண்டும். எனவே, மேற்கண்ட செலவினத் தொகை ரூ.6300/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம், மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | **தீர்மானம் எண்.1458, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–11 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டி.என்.65, ஏஇசட்–2553 JCB ROBOT (Bobcat) வாகனத்தின் பேட்டரி பழுதடைந்துள்ளதால், இவ்வாகனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மற்றும் இதர பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்கப்படும் சூழல் உள்ளதால், மேற்குறிப்பிட்ட டி.என்.65, ஏஇசட்–2553 JCB ROBOT (Bobcat) வாகனத்திற்குத் தேவையான 1 எண்ணம் 12 வோல்ட் 11 பிளேட் பேட்டரி கொள்முதல் செய்திடவும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து ரூ.15000/– உத்தேச செலவினத்திற்குள் விலைப்புள்ளி பெற்று பேட்டரி கொள்முதல் செய்திட நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1459, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–12 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு கழிவு மேலாண்மை திட்டத்தில் இயங்கிவரும் கீழ்க்கண்ட 9 எண்ணிக்கையிலான டிப்பர் ஆட்டோ வாகனங்களின் வருடாந்திர தகுதிச்சான்று முடிவடைந்தாலும், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் பொது சுகாதாரம் பாதிக்காவண்ணம் வருடாந்திர தகுதிச்சான்று பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாலும் அதற்குத் தேவையான பழுதுப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கீழே பட்டியலில் குறிப்பிட்டுள்ள 9 எண்ணிக்கையிலான டிப்பர் ஆட்டோ வாகனங்களுக்கு TATA MOTORS அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து உத்தேச செலவினம் ரூ.360000/–க்குள் ஒப்பந்தப்புள்ளி பெற்று பழுதுப்பணிகள் மேற்கொள்ளவும் தகுதிச்சான்று பெறுவதற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>வாகன விபரம்<br>வ.எண் – வாகன எண்<br>1. TN65AV3613<br>2. TN65AV3632<br>3. TN65AV3615<br>4. TN65AV3695<br>5. TN65AV3686<br>6. TN65AV2162<br>7. TN65AV2181<br>8. TN65AV2185<br>9. TN65AV2115<br>அலுவலககுறிப்பு<br>1.நகர்மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பொதுமக்களின் சுகாதார அவசியம் கருதி உடனடியாக செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1460, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–13 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு வாகனத்தின் டி.என்.65யை 8911க்கு தகுதிச்சான்று பெரும் பொருட்டு மேற்கண்ட வாகனத்திற்கு மீண்டும் தகுதிச்சான்று பெற ஓட்டுநர் குறிப்பின்படி வாகனத்தில் உள்ள பழுது பணிகள் நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. எனவே தெருவிளக்கு அவசியம் கருதி தெரு விளக்கு வாகனத்திற்கு பழுது பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.55000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.1461, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–14 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 34ல் அமைந்துள்ள தியாகி இமானுவேல் சேகரனார் நினைவிடத்தில் எதிர்வரும் 11.09.2021 அன்று நினைவு தினம் அனுசரிக்கப்படுவதை தொடர்ந்து அங்கு வரும் அரசியல் தலைவர்கள் மற்றும் பொது மக்களின் நலன் கருதி நினைவிடத்தைத் சுற்றியிருந்த பகுதிகள் அழகப்பா பல்கலைக்கழகம் சந்தைப்பேட்டை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், பொன்னையாபுரம் இரயில்வே சுரங்கப்பாதை, ஐந்து முனை சந்திப்பு ஆகிய பகுதிகளில் மின் விளக்கு வசதிகள் ஏற்படுத்தவும் மேற்படி பகுதிகள் மற்றும் ஒட்டப்பாலம் முதல் முத்தையா கோவில் வரை சாலையின் இருபுறங்களிலும் மறத்தாலான தடுப்புகள் அமைக்கவும், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தவும் மற்றும் நினைவிடத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் கிராவல் மற்றும் குவாரி மணல் நிரப்பவும், அழக்கப்பா பல்கலைக்கழக வளாகத்தில் தற்காலிக கழிப்பறை அமைக்கவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டம் மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர் பரமக்குடி அவர்களின் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி பணிகள் மேற்கொள்ள ஏற்படும் உத்தேசத் செலவினத்தொகை ரூ.350000/–ஆகும் மேற்படி நினைவு தினத்திற்கு குறுகிய நாட்களே இருப்பதால் பணியின் அவசியத்தைக் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்பணியினை இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.வி.மேகவர்ணம் என்பவர் மூலம் மதிப்பீட்டு விலைக்கு ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளும் பொருட்டு அனுமதித்ததை மன்றம் ஏற்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி பணியின் சட்ட ஒழுங்கு அவசர அவசியத்தைத் கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று மதிப்பீட்டு விலைக்கு ஒப்படைப்பு பணியாக திரு.வி.மேகவர்ணம் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1462, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–15 | இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.18–ல் அமைந்துள்ள நவீன மீன் மார்க்கெட்டில் உள்ள தினசரி திறந்தவெளி கடைகளுக்கு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 270 விதிகளின் படி திறந்த வெளி கடைகளுக்கு தினசரி வசூல் செய்யும் பொருட்டு 1 கடைக்கு நாள் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் கட்டணம் வசூல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**தீர்மானம் எண்.1463, அனுமதிக்கப்பட்டது.** |

தனிஅலுவலர்(பொ)
பரமக்குடி நகராட்சி.